**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 10.06.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 19 (LW24)

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 10ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பவுல் யேசுதாசன் | தொழில் | |
| தந்தை பெயர் | இருதயராஜ் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( எதிரி ஆஜர்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் மாசர்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2023ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வளராக பணிபுரிந்தேன். அந்த சமயம், கடந்த 18.11.2023ம் தேதியன்று திருப்பாலைக்குடி காவல் நிலைய குற்ற எண்.196/2023, பிரிவு 302 இதச வழக்கு கோப்பினை முதல்கட்ட விசாரணை மேற்கொண்ட திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.விமலா அவர்களின் விசாரணை மேற்கொண்ட விவரம் எனக்கு நன்கு தெரியும். அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:27 +0530

தற்சமயம் அவர் வேறு பணியில் ஈடுபட்டு, உடனடியாக நீதிமன்றத்திற்கு வர இயலாத சூழ்நிலையில் இருப்பதால், அவருடைய விசாரணை குறித்தும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 19.11.2023 ம் தேதியன்று காலை 09.00 மணிக்கு திருப்பாலைக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளார் திரு.பூமுத்து அவர்கள் கொத்தவயல் கிராமத்தை சேர்ந்த அய்யன்பெருமாள் மனைவி காளீஸ்வரி என்பவர் கொடுத்த புகாரை பெற்று, திருப்பாலைக்குடி காவல் நிலைய குற்ற எண். 196/2023, பிரிவு 302 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் தகவல் அறிக்கையையும், புகார்மனுவினையும் இணைத்து திருவாடானை நீதிமன்றத்திற்கு நிலைய தலைமைக்காலவர் திரு.சிவானந்தன் என்பவர் மூலம் துரிய முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைத்து, மேல் விசாரணைக்கு திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.விமலா அவர்களுக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை அவர் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சௌந்தர்ராஜன், பிச்சை சவரிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜரில் அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.16** ஆகவும், அந்த **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.17** ஆகவும் தற்போது குறியீடு செய்யப்படுகின்றன.

பின் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து, 10.30 மணிக்கு இரத்தக்கறை படிந்த சிமெண்ட் மற்றும் இரத்தக்கறை படியாத சிமெண்ட் ஆகியவற்றை அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.18** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. **இரத்தக்கறை படிந்த**



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:29 +0530

**சிமெண்ட் அ.சா.பொ.6** ஆகவும், **இரத்தக்கரை படியாத சிமெண்ட் அ.சா.பொ.7** ஆகவும் தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. பின் மேற்கண்ட சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின் வழக்கின் சாட்சிகளான காளீஸ்வரி, அய்யம்பெருமாள், இளவர்.உதேஸ்குமார், சித்திரைவேல், ஜான்சன், ராமு ஆகியோர்களையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

அன்றைய தினம் 13.00 மணி முதல் 14.00 மணி வரை இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து வழக்கின் பஞ்சாயத்தார்களான தயின்ராஜ், அந்தோணி, அலெக்ஸ், பாலு, ஜான்சன் ஆகியோர் முன்னிலையில் இறந்துபோன முனியசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.19** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை அறிக்கை மற்றும் வேண்டுகோள் கடிதத்தையும் இராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சட்டம் சார்ந்த பேராசிரியரிடம் பிரேத பரிசோதனை செய்ய நிலைய காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பி பிரேத விசாரணை செய்துள்ளார். பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட உள்ளுறுப்புகளை மருத்துவ சேமிப்பு கிடங்கில் வைத்துள்ளார்.

அன்றைய தினம் 16.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியான சுமதி என்பவரை தேடி வந்த நிலையில் சோழந்துார் ராஜுவ்காந்தி நகர் பஸ் ஸ்டாப்பில் வைத்து பிடித்து விசாரித்தபோது உடனிருந்த சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் சரண்ராஜ் மற்றும் பாலு ஆகியோர் முன்னிலையில் எதிரியை எவ்விதமான அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி விசாரித்த போது, எதிரி அளித்த வாக்குமூலத்தை ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த இரத்தக்கரை படிந்திருந்த நைட்டி, சம்பவத்திற்கு பயன்படுத்திய



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.10 18:05:32 +0530

இரும்பு கம்பியையும் மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் பேரில், மேற்படி சாட்சிகளுடன் சம்பவ இடத்திற்கு பின்னால் உள்ள சமையல் கொட்டகையில் இருந்து, எதிரி மறைத்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த, சொத்துக்களை அன்றைய தினம் 17.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த **ஒப்புல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.10 ஆக ஏற்கனவே** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த **நைட்டி அ.சா.பொ.2 ஆகவும், அந்த இரும்பு கம்பி அ.சா.பொ.1 ஆக ஏற்கனவே** குறியீடு செய்யப்பட்டுள்ளன.

பின் தயாரிக்கப்பட்ட, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்று, நிலையம் வந்து, எதிரியை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலமும், எதிரியை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அந்த **படிவம் 91 ஆனது அ.த.சா.ஆ.20** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின் வழக்கின் சாட்சிகளான குமார், இறந்துபோன முனியசாமியை பரிசோதனை செய்து இறப்பு பதிவேடு பதிவு செய்த இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் ராஜமூர்த்தி என்பவரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலைய சார்பு ஆய்வார் பூமுத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின் நான் 19.11.2023 ம் தேதியன்று வெளி அலுவல் பணி முடித்துவிட்டு நிலையம் வந்து பணி அறிக்கை செய்து நிலைய புலன் விசாரணையில் இருந்த மேற்கண்ட வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.10 18:05:34 +0530

இடம் சென்று சம்பவ இடத்தையும், வழக்கு கோப்பில் இருந்த ஆவணங்களையும் மற்றும் உடன் சாட்சிகளையும் விசாரிக்க, சாட்சிகள் சொன்ன வாக்குமூலங்கள் ஆவணங்களில் இருந்த வாக்குமூலங்களையே ஒத்து இருந்ததால், நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

பின் 21.11.2023ம் தேதியன்று இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான இளவர்.உதேஸ்குமார் என்பவருக்கு இரகசிய வாக்குமூலம் பெற திருவாடானை நீதிமன்றத்தில் கொடுத்த வேண்டுகோளின்பேரில், மேற்படி இளவரை ஆஜர் செய்து இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டு, அதன்படி மேற்படி சாட்சிக்கு நான் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுக்கு நீதிமன்றத்தில் PR No. வழங்கிய நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு.மோகனசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின் 02.01.2024ம் தேதியன்று நீதிமன்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று, இறந்துபோன நபரின் உடல் உள்ளுறுப்புகளையும், வழக்கு சொத்துக்களையும் நிலைய தலைமை காவலர் திரு.பாலமுருகன் என்பவர் மூலம் இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

22.01.2024ம் தேதியன்று நீதிமன்ற உத்தரவுப்படி சொத்துக்களை பகுப்பாய்வு செய்து, பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணியில் இருந்த தங்கவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **Biological report அ.த.சா.ஆ.21** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன முனியசாமியின் உடல் உள்ளுறுப்புகளை ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கை வழங்கிய இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் அலுவலர் திரு.மணிமாறன் என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்று, அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். **Viscera report அ.த.சா.ஆ.22** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின் 04.02.2024ம் தேதியன்று இறந்துபோன முனியசாமி என்பவரின்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:38 +0530

பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டு வட்டார தடய அறிவியல் ஆய்வறிக்கையின்படி, பிரேத பரிசோதனையின் இறுதி கருத்துரை சான்று வழங்கிய இராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி தலைமை மருத்துவமனை உதவி அறுவை சிகிச்சை நிபுணர் திரு.மனோபாலாஜி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின் வழக்கின் புலன் விசாரணையின்படி, எதிரியின் மீது பிரிவு 302 இதச–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரேதம் கிடந்த வீடானது யாருடையது என்பது குறித்து நான் ஆவணமோ, சாட்சிய வாக்குமூலமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முனியசாமியின் பிரேதம் கிடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு அருகில் உள்ளவர்களில், ராமு மற்றும் ஜான்சன் ஆகியோரை தவிர வேறு யாரையும் நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ராமு என்பவரது வீடு வாகவயல், பொட்டகவயல் ரோட்டிற்கு தெற்குப்பக்கம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் முனியசாமியின் பிரேதம் கிடக்கவில்லை என்றும், அது கிடந்ததாக சொல்லப்படும் இடம் முனியசாமியின் வீடே அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் AR நகலை பார்த்துள்ளேன். அதில் SSI முருகானந்தம் தான் முனியசாமியை மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் காவலர்கள் உடன் வந்தால்தான் பிரேதத்தை வாங்கமுடியும் என்று சொன்னதால், SSI முருகானந்தம் உடன் சென்றுள்ளார்.

அ.சா.1 காளீஸ்வரி என்பவர் தான் காயம்பட்டு கிடந்த முனியசாமியை ஆம்புலன்ஸ்–ல் கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்ததாகவும், அங்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:40 +0530

மருத்துவர் பரிசோதனை செய்து, அவர் இறந்துவிட்டதாக சொன்னதன்பேரில், அவர் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

சம்பவத்திற்கு முன்பிலிருந்தே, RS மங்களத்தில்தான் எதிரியும், அவரது குழைந்தையும் தன் கணவரை விட்டு பிரிந்து வசித்து வந்தார்கள் என்றாலும், வாகைவயலில் சம்பவ காலத்திலோ, சம்பவ காலத்திற்கு முன்போ முனியசாமியுடன் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல.

முனியசாமிக்கு இரு குழந்தைகள் என்றால் சரிதான். ஒரு இளவரை மட்டும்தான் விசாரித்தேன். மற்றொரு இளவர் அங்குதான் இருந்தார். அவர் மிகவும் இளம் வயதினராக இருந்ததாலும், அவர் பதற்றத்துடன் இருந்ததாலும் அவரை வழக்கு குறித்து நான் விசாரிக்கவில்லை. அவரின் வயது தொடர்பாக வாக்குமூலமோ, ஆவணமோ நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

முனியசாமி மது அருந்தியிருக்கிறார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையின்படி தெரியவருகிறது என்றால் சரிதான். அவர் எங்கு வைத்து குடித்தார் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி முனியசாமிக்கு மது அருந்திவிட்டு யாரிடமாவது தகராறு செய்வதுதான் வழக்கம் என்றாலும், அது போல் அன்றைய தினம் அதிக போதையில் எங்கோ, யாரிடமோ தகராறு செய்து, காயம்பட்டார் என்றாலும், காயம்பட்டு கிடந்தவரை அ.சா.14 முருகானந்தம் தூக்கிகொண்டுவந்து மருத்துவமனையில் சேர்த்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி விவரங்களை முற்றிலும் மறைத்து காலதாமதமாக அ.சா.1 ஐ வரவழைத்து புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான பாலு மற்றும் சரண்ராஜ் ஆகியோரின் வாக்குமூலத்தில் வாசுகி என்பவரை விசாரித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பிழையாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது போன்று, எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன முறையில் எதிரியை கைது



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:43 +0530

செய்யவில்லை என்றாலும், அவர் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அவர் எந்த வழக்கு சொத்துக்களையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றாலும் அவை இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளன என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும், மிக காலதாமதமாக நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் உண்மை தன்மையை முற்றிலுமாக மறைத்து, ஒரு தலைபட்சமாக புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள ஆவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள், வாக்குமூலங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.10 18:05:46 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .